மாண்புமிகு திரு க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த மருத்துவ மனையைப் போல ஏறத்தாழ 400, 450 மருந்தகங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தமிழ்நாடு முழுவதுமுள்ள பேரூராட்சி மன்றங்களும், ஒன்றியங்களும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். ஒரு மருந்தகத்தை மருத்துவமனையாக ஆக்குவதற்கு 50 ஆயிரம், 60 ஆயிரம், 70 ஆயிரம் ரூபாய் என்று செலவாகும். அதற்கு அண்மையில் வேறு பெரிய மருத்துவ மனை இல்லாவிட்டால், அப்படிப்பட்ட இடங்களில் மருந்தகங்களை மருத்துவ மனைகளாக மாற்றியிருக்கிறோம். இந்த ஆண்டு 45 மருந்தகங்களை மருத்துவமனைகளாக மாற்றியிருக்கிறோம். ஒவ்வொரு ஆண்டும் சற்றுத் தொலைவில் வேறு மருத்துவ வசதி இல்லாது உள்ள மருந்தகங்களை மருத்துவமனைகளாக மாற்றியமைப்பது என்ற ஒரு அடிப்படையில் செய்து வருகிறோம். எந்த ஆண்டு இந்த அடிப்படையில் அந்த மருந்தகம் வருகிறதோ அப்போது எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : தலைவரவர்களே, சேத்தூரில் நகரப் பஞ்சாயத்து இருக்கிறது. அது சுற்றேறத்தாழ 15 ஆயிரம் ஜனத்தொகை உள்ள நகரப் பஞ்சாயத்து. அதைச் சுற்றிலுமுள்ள கிராமங்களில் உள்ளவர்கள் அங்கே வருவார்கள். அவ்வளவு ஜன நெருக்கம் உள்ள பிரதேசம். அண்மையில் சில மைல்கள் தூரத்தில் மருத்துவ மனை இருந்தாலும், அந்தப் பகுதியை உத்தேசித்து, ஜன நெருக்கம் போன்ற விஷயங்களை உத்தேசித்து, சேத்தூரில் பஞ்சாயத்து கோரியுள்ளபடி, அரசு அதை மருத்துவமனையாக்க முன் வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, முறையாகப் பரிசிலித்து, கூடிய விரைவில் நடவடிக்கை எடுத்துக் கொள்ள முயற்சி எடுக்கப்படும்.

Housing Scheme for the repatriates in Madras City

* 277 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether any housing scheme is to be implemented for the repatriates in Madras City with Central Government aid; and

(b) if so, the details thereof?

1972 நவம்பர் 13]

அகதிகளுக்கு வீடு கட்டும் திட்டம்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :

(அ) சென்னை மாநகரிலுள்ள அகதிகளுக்காக மத்திய அரசின் நிதியுதவியுடன் வீடு கட்டும் திட்டம் ஏதேனும் நிறை வேற்றப்படவிருக்கிறதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) சென்னை மாநகர், பெரம்பூர் நில அளவை எண் 779/23 வியாசர்பாடி ஏரிப்படுகைப் பகுதியில் பர்மா அகதிகளுக்காக 2760 வீடுகள் கட்டுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. ஒவ் வொரு அகதிக் குடும்பத்திற்கும் 3 செண்டிற்கு மேற்படாத வீட்டு மனை இலவசமாக ஒப்படை செய்யப்படும். ஒவ்வொரு குடும்பமும் வீடு கட்டுவதற்கு ரூ. 4,100 கடன் பெறுவதற்கு உரிமையுள்ள தாகும். இதனால் இந்த அரசுக்கு ஏற்படும் செலவு முழுவதையும் இந்திய அரசு ஈடு செய்யும்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவரவர்களே, சென்னை நகரில் எவ்வளவு அகதிகள் குடும்பங்கள் இருக்கின்றனவென்று தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, திட்டவட்டமாக எவ்வளவு குடும்பங்கள் என்று சொல்ல முடியாது. குறிப்பாக எனது தொகுதியைச் சேர்ந்த காரணத்தினால், ஏறத் தாழ 3 ஆயிரம் குடும்பங்கள் இருக்கின்றன என்று கருதுகிறேன்.

திரு. சி. வி ராஜகோபால் : தலைவரவர்களே, அகதிகள் என்று கூறுகிறபோது, எந்தப் பக்கத்தினுடைய அகதிகள் அதிகமாக இருக்கிறார்கள் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். சிலோன், மற்றப் பகுதிகளிலிருந்து வந்தவர்கள் இருப்பார்கள். எந்தப் பகுதியிலிருந்து வந்தவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, பர்மா அகதிகள்தான் ஏராளமாக வந்திருக்கிறார்கள்.